மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு உட்பட்ட பகுதியில் நேற்று பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, பொறுப்பாளர் கலைகதிரவன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடுவீர்! தாம்பரம் மாநகராட்சிக்கென

# 100 எம்.எல்.டி. திறன் கொண்ட - கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் எஸ்.ஆர்.இராஜா வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 24-**

**சட்டப்பேரவையில், நீர்வளத்துறை மற்றும் இயற்கை வளங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தாம்பரம் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.ஆர்.இராஜா, "தாம்பரம் மாநகராட்சிக்குக்கென 100 எம்.எல்.டி. கொள்ளளவுள்ள, கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவீர்!" என வேண்டு கோள் விடுத்தார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :-**

சட்டமன்றக் கூட்டத் தொடரின் நீர் வளம், இயற்கை வளம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த, 40 தொகுதிகளை வென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், அவை முன்னவர் அண்ணன், துரைமுருகன் அவர்களுக்கும், அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பேசாமல், இந்த அவையில் என்னுடைய உரையைத் துவங்க முடியாது. கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கும், இங்கு அமர்ந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறன். நேரம் குறைவாக இருந்தாலும், எனக்கு வழிகாட்டியாக இருக்கும் என்னுடைய தலைவரைப் பற்றி, இரண்டு வார்த்தைகளாவது பேசாமல் என்னால் என் உரையைத் துவங்க முடியாது. முதலமைச்சர் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்று, அரசியலில் அனைவருக்கும் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றார். கழகத் தலைவராய் பொறுப்பேற்றபின் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி கண்டு, தேசிய அளவில் அரசியல் முன்னோடியாக இன்றைக்கு திகழ்ந்துகொண்டிருக்கிறார். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, அனைவருக்குமான முதலமைச்சராக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். என்னைப் போன்ற கோடானுகோடி தொண்டர்களை வழிநடத்தி, தேர்தல் களம் கண்டு, எங்கள் முன்னே படைத்தளபதியாய் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இந்திய அளவில் வலுவான கூட்டணித் தேர்தலை சந்தித்து, வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கின்றார். தொடர்ச்சியான முழுமையான வெற்றி பெற வேண்டும் என்றால், ஒரு தலைவனாக கட்சியை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை அனைத்துக் கட்சியினரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற செய்தியை தேர்தல் வெற்றியின்மூலம் உணர்த்தியிருக்கின்றார்.

ஆனால், நான் சொல்கிறேன், என்னைப் போன்ற கோடானுகோடி தி.மு.க. தொண்டர்களுக்கு மட்டும் வழிகாட்டியாக அல்ல, அரசியலில் சாதனை படைக்கத் துடிக்கும் எந்த ஒரு இளைஞனுக்கும், இங்கு அமர்ந்திருக்கின்ற அனைத்துக் கட்சியினருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அவருடைய வழிகாட்டுதலில்தான் நாங்கள் இன்றைக்கு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இது போன்று ஒற்றைச் செங்கலை வைத்துக் கொண்டு ஒரு சட்டமன்றத் தேர்தலிலே வெற்றியைக் கண்டு இன்றைக்கு வெறும் 29 பைசா நாணய பதாகையாகக் கொண்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசை அம்பலப்படுத்தி இன்றைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய அரசியலில் புது trend-ஐ உருவாக்கியிருக்கிறார். இந்த மாடலைப் பார்த்துதான் தெலங்கானாவிலே கழுதை மூட்டையைக் காண்பித்து தேர்தலிலே வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அது போலத்தான் கர்நாடகாவிலே சொம்பை வைத்து வெற்றி பெற்றிருக்கிறது. நம்முடைய உதயநிதி அவர்களைப் பார்த்துதான் இன்று இந்த இரண்டு அரசுகளும் தேர்தலிலே வெற்றி பெற்றிருக்கிறது. இங்கு நம்முடைய முதல்வர் எவ்வளவு முன்னோடியாக திகழ்கிறார் என்று சொன்னால் காலை 10 மணிக்கு கூட்டம் ஆரம்பித்தவுடன், 10.10-க்கு எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வெளிநடப்பு... வெளிநடப்பு என்று சொல்வதைவிட்டு அவர்களை வெளியேற்றிவிட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எங்கே எங்கே என்று கேட்டார் ஆனால் பக்குவமுள்ள ஒரு முதலமைச்சர் 10.30 மணிக்கு வந்தால் 11.00 மணிக்கு எல்லாம் இதுவரை அரசியல் வரலாற்றிலே அவையை விட்டு வெளியே தூக்கி எறிந்தவர்களை மீண்டும் அவைக்கு வாருங்கள், நீங்கள் விவாதத்திலே கலந்து கொள்ளுங்கள் என்று உத்தரவை மாற்றியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்த நாகரீகத்தை அவர்கள் எப்போது கற்றுக் கொள்வது, எப்போது மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வருவது. என்னுடைய கணக்கு சரியாக இருந்தால் அவர்கள் இனிமேல் அவர்கள் ஆட்சிக்கு வர வாய்ப்பே இருக்க முடியாதுபோல் இருக்கிறது. அந்த அளவிற்குத்தான் அரசியல் பார்வை இருக்கிறது.

இருந்தாலும் நீரின்றி அமையாது உலகு என்ற வள்ளுவன் வாக்கு நாட்டிற்கு நீர்வளம் எந்தவுக்கு இன்றியமையாததோ தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நீர் வளம் என்ற சூழல் மிகமிக முக்கியமானது. இந்தியாவின் ஒட்டுமொத்த நீர்வளம் 1.859 க.கீ.மீ. இதில் தமிழ் நாட்டின் பங்கு வெறும் 3 விழுக்காடு அளவுதான். இதில் நிலப்பரப்பில் தமிழ்நாட்டின் பங்கு 4 விழுக்காடு மட்டும்தான். ஆனால் நீர்வளத்தின் பங்கோ 3 விழுக்காடு அந்தளவிற்கு நம் மாநிலத்தின் நீர்வளம் மிக மிகக் குறைவாக உள்ளது. அனைத்திந்திய அளவில் தனிமனித பங்காக per capita தலா 2,200 க.மீ. என்ற அளவில் நீர்வளம் உள்ளது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் per capita நீர்வளம் என்பது வெறும் 750 க.மீ.தான். அந்த அடிப்படையில் தமிழகம் நீர்வளம் குன்றிய மாநிலமாக ஐ.நா. அமைப்பு இன்றைக்கு அறிவித்திருக்கின்றது.

**நீர் வளப் பண்பாடு!**

தமிழ்நாடு தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மைத் துறையில் தொடர்ந்து வளர்ச்சியும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. ஆனால் நீர்வளக் குறைபாடு அதிகரித்து வருகிறது. எனவே, நீர்வளத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தளபதி அரசு அவர்கள் தனித் துறையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். மாநில நீர்வள ஆதாரத்தை மேம்படுத்துதல், புதிய நீர்வளங்களை உருவாக்குதல், நீர் வளப் பயன்பாடு மற்றும் மேலாண்மையை மேம்படுத்துதல் போன்ற தளபதி அரசு சென்ற 3 ஆண்டுகால ஆட்சியில் எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. நீர்வளப் பயன்பாட்டில் முதல் உரிமை குடிநீர் ஆகும். வேளாண்மை, தொழில் துறை உள்ளிட்ட பிற பயன்பாடுகள் குடிநீருக்குப் பிறகுதான் முன்னுரிமை பெற முடியும். அது தான் அரசின் நீர்வளப் பண்பாடாக நெடுநாள் கொள்கையாக அதேசமயம் வேளாண் உற்பத்தியில் தொழில் வளர்ச்சி, தொழில் உற்பத்தி நீர்வளம் பெரிதும் நம்பியுள்ள பட்டியலில் இந்தத் துறைகள் தேவையான அளவு பெறாவிட்டால் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி கடும் பாதிப்பை சந்திக்கும்.

தமிழ்நாட்டில் காவிரி, வைகை, பாலாறு, தாமிரபரணி உள்ளிட்ட 17 நதிப்படுகைகள் river basin இருந்தாலும் இவை நமது நீர்வளத் தேவைகளை முழுவதும் பூர்த்தி செய்வதில்லை. அதுபோல ஏறத்தாழ 42,000 ஏரிகளும், குளங்களும் இருந்தாலும் (மணியடிக்கப்பெற்றது.) நீர்வள ஆதாரம் முழுமையாக 44 சதவிகிதம்தான் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர் ஆதாரமாக 56 விழுக்காடு அளவுக்கு கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலமாக நிலத்தடி நீர் தமிழகத்தின் மிகப்பெரிய நீர்வளம் ஆகும். எனவே, தமிழக அரசின் நீர் கொள்கை கிணறு ஆழ்துளைக் கிணறுகள் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இதில் புதிய தொழில் நுட்பங்கள் நிலத்தடி நீர்வளத்தை இரட்டிப்பாக்குவதற்கு திட்டங்கள் வழிவகை கண்டறிந்து ஆறுகளின் குறுக்கே அதிக எண்ணிக்கையில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே அவையின் முன் கவனத்திற்கு நான் எடுத்து வைக்கிறேன். எனவே, மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர் இரு மடங்காக உயர்த்தும் நோக்கத்துடன் இவ்விரிவான சிறப்பு master plan ஒன்றை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். அதுபோல ஏரிகள், குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட ஏனைய. . .(மணியடிக்கப்பெற்றது)

தாம்பரம் மாநகராட்சியில் உள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அவை முன்னவர் கவனத்திற்கு மற்றும் உங்கள் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். தொகுதிப் பிரச்சினையை பேசாமல் இருந்தால் நன்றாக இருக்காது. ஒரே யோரு செய்தியை மட்டும் நான் சொல்கிறேன். எனக்குத் தெரிந்து 66 ஆண்டுகளுக்கு முன்பாக கிராம நத்தம், காலனி நத்தம், ஏரி, குளம், குட்டை, கால்வாய், விவசாய நிலங்கள் மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் இதுபோன்றுதான் எனக்கு தெரிந்து இருந்தது.

ஆனால் அப்பொழுதே 2006-2011-ல் முதலமைச்சர் அவர்கள் தாம்பரத்தில் மட்டும் 30 ஆயிரம் பேருக்கு பட்டா கொடுத்தார். பட்டா நிலங்களே இல்லை. தாம்பரத்தைப் பொறுத்தவரை, air force 3800 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். Madras Christian College 390 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். Railways 500 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். 19 அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 10 ஏக்கர் கிரவுண்டில் நிலம் சென்று விட்டது. இருப்பதற்கு இடமே இல்லை. எனக்கு தெரிந்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போக வேண்டுமென்றால், நான் என் அனுபவத்தில் பார்த்தது, ஏரிக்கரை மீதுதான் நாங்கள் நடந்தே செல்வோம். ஏரிக்கரை மீதிருந்துதான் பால் கொண்டு வந்து எங்கள் வீட்டிற்கு தருவார்கள். ஆனால் இன்றைக்கு ஏரிகளுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்று சொன்னால், தாம்பரத்தைப் பொறுத்தவரை ஏழையெளிய மக்களுக்கு தற்போது வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக, 12 இலட்ச ரூபாய்க்கு இனாமாக வீடு கொடுக்கிறார்கள். கிராமங்களில் வீடுகட்டுவதற்கு 3 இலட்ச ரூபாய் மானியமாக அளிக்கிறார்கள். நகர்ப்புற வாழ்விட வாரியம் மூலமாக, நமது முதலமைச்சரின் வீடுகட்டும் திட்டம் மூலமாக யார் வேண்டுமானாலும் மனு செய்தால், 3 இலட்ச ரூபாய் வருமானம் இருந்தால், இலவசமாக வீடு வழங்கப்படுகிறது.

ஆனால், 50 முதல் 60 ஆண்டு காலமாக, மேட்டுப்பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்கள் இன்றைக்கு என்ன தெரிவிக்கிறார்கள் என்று கேட்டீர்களேயானால், இது ஏரிப்பகுதி, இது பிட்டப்பகுதி எப்போது போட்டது? பட்டா கொடுப்பதற்கு முன்னால், எங்களுக்கே 2006 ஆம் ஆண்டுதான் கிராம நத்தம் என பட்டாவே கொடுத்தார்கள். அதற்கு முன்னர் சாணத்தை எங்கே போட்டார்களோ அந்த நிலம் அவர்களுக்கு சொந்தம். வைக்கோல் எங்கே போட்டார்களோ அந்த நிலம் அவர்களுக்கு சொந்தம். வண்ணாருக்கென்று ஒரு மானியம், தச்சனுக்கென்று ஒரு மானியம், யார் யார் வேலை செய்தார்களோ அவர்களுக்கெல்லாம் மானியம் தானே தவிர, எங்குமே பட்டா இருக்காது. ஆனால், தற்போது, குறிப்பாக தாம்பரம் தொகுதியில் மட்டும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், செம்பாக்கம் பகுதியில் இருப்பவர்கள், சிட்லப்பாக்கம் ஏரிப்பகுதியில் இருப்பவர்கள், இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் இருப்பவர்கள், அதேபோல, மாடம்பாக்கம் ஏரிப் பகுதியில் இருப்பவர்கள்—தாம்பரம் தொகுதியில் மட்டும் நான் சொல்ல வரவில்லை. திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (மணியடிக்கப்பெற்றது) சென்னையை ஒட்டியிருக்கின்ற மாவட்டத்திலே...

இந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் வாழ்வாதாரம், நித்தம் நித்தம் கேள்விக்குறியாகி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டால், நீதிமன்றம் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து சொல்கிறேன். நம்முடைய ஆட்சி, ஏழையெளிய மக்களுக்காக இருக்கின்ற ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்திலே எதை எடுத்துச் சென்றாலும் வெற்றி பெற முடியும். தனித்தனியாக இதை ஆய்வு செய்து, ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டியது இந்த அரசு. காப்பாற்றுவார்கள் என்பதை இந்தநேரத்தில்—கோவில் இடம்கூட இருக்கிறது. எல்லா இடங்களையும் நான் சொல்வேன், நேரத்தின் அருமை கருதி—ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரம், தொந்தரவு இல்லாமல் அந்த ஏழைகள் வாழ்ந்தால் போதும். அனுபோக பாத்தியம் என்று ஒரு சான்றிதழே ஏற்கெனவே கிராமங்களில் இருந்தது. அதைத் தர வேண்டும். அமைச்சர் அவர்கள் கையைக் காட்டுகிறார்கள். அமைச்சர் அவர்கள் நினைத்தால் முடியாதது ஒன்றுமில்லை. நான் படித்திருக்கிறேன். எதை ஒன்றை நினைத்தாலும் முடிக்கின்ற சக்தி அமைச்சருக்கு இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**தொகுதிக் கோரிக்கைகள்**

சென்னை பெருநகர குடிநீர் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் 400 MLD கடல்நீரை குடிநீராக்கும் திட்ட வசதி (Desalination Plant) அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் மேற்படி வாரியத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் தாம்பரம் மாநகராட்சிக்கென 100 மில்லியன் லிட்டர் (100 MLD) கொள்ளவுள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தினை (Desalination Plant) செயல்படுத்திட வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலத்திற்குட்பட்ட ராஜகீழ்பாக்கம் மாடம்பாக்கம் சாலையை ஆறுவழி சாலையாக மாற்ற வேண்டும்.

தாம்பரம் தொகுதி - புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, வெங்கம்பாக்கத்தில் இருந்து மப்பேடு வரை செல்லக்கூடிய தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையை மேம்படுத்தி தர வேண்டும்.

தாம்பரம் தொகுதியில் உள்ள தனியார் குடியிருப்பு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு, அன்னை அஞ்சுகம் நகரில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள குடியிருப்புகள், சி.டி.ஓ காலனி மற்றும் சசிவரதன் நகர் போன்ற இடங்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும்.

மேற்கு தாம்பரத்தில், டி.டி.கே நகரில் உள்ள தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான 6 1/2 ஏக்கர் நிலத்தினை மாணவ மாணவியர் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டு திடலாக பயன்படுத்திக் கொள்ள, அந்த இடத்தினை தாம்பரம் மாநகராட்சியின் பெயரில் மாற்றி தரவேண்டும்.

சிட்லபாக்கம் ஏரியில் இருந்து சிட்லபாக்கம் குளத்திற்கு பூமிக்கு அடியில் குழாய்கள் மூலம் தண்ணீர் எடுத்து செல்ல வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சிட்லபாக்கம் ஏரி புனரமைப்பு பணிகளை விரைந்து முடித்திட வேண்டும். மேலும் பச்சைமலையில் இருந்து வெளியேறும் மழைநீர், சிட்லபாக்கம் ஏரிக்கு தங்கு தடையின்றி வந்து சேர்ந்திடும் வகையில் கட் அன்டு கவர் கால்வாய், வரவு கால்வாய் உள்ளிட்ட கால்வாய்களை தூர்வாரி குப்பைகளை அகற்றி, மழை வெள்ள நீரோடு கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கும், மேலும் உபரிநீர் தாங்கல்கரை, அரிதாஸ்புரம், வி.க நகர் வழியே செம்பாக்கம் ஏரிக்கு செல்லும் வகையில் நீர்பாதையை செப்பனிட்டு சீரமைத்து தர வேண்டும்.

தாம்பரம் தொகுதி, கடப்பேரி பெரிய ஏரியை தூர்வாரி, கரையை பலப்படுத்தி கரையின் மீது இலகுரக வாகனங்களும் செல்லக்கூடிய வகையில், விளக்கு வசதிகளுடன் கூடிய தரமான சாலையை அமைத்து தர வேண்டும். மேலும் ஏரியின் மேற்கு பகுதியில் நடைபெறும் சமூக விரோத செய்லகளை தடுத்திடவும் தவறுகள் நடவாவண்ணம் கண்காணித்திடவும், புறக்காவல் நிலையம் நிறுவிடவும், ஏரிக்கு வரும் சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்திடும் பணியினை விரைவில் முடிக்கவும் உரிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட சர்வே எண் 256ல் 25.748 ஏக்கர் விஸ்தீரனம் கொண்ட முல்லை நகரில் உள்ள புதுத்தாங்கல் ஏரி மற்றும் வண்ணான் தாங்கள் ஏரி ஆகிய ஏரிகளை தூர்வாரி புனரமைப்பு செய்து, நடைபாதை மற்றும் மின் விளக்குகள் அமைத்து தர வேண்டும். மேலும் மாடம்பாக்கம் தாங்கல் ஏரி கரையில் உள்ள செடி, கொடி புதர்களை அகற்றி சுத்தப்படுத்தி நீர்நிலையை தூர் வாரி ஆழப்படுத்தி கழிவு நீர் கலப்பதை தடுத்து கரைகளை உயத்தி நடைபாதை அமைக்க வேண்டும்.

முடிச்சூர் ஏரி, சீக்கனான் ஏரி, திருவஞ்சேரி, சித்தேரி, மதுரப்பாக்கம் ஏரி, மூலச்சேரி ஏரி இடும்பன் ஏரி, எட்டிதாங்கல் ஏரி, இரும்புலியூர் ஏரி, சேலையூர் ஏரிகளை தூர்வாரி கரைகளை பலப்படுத்திட போதுமான நிதி ஒதுக்கி தர வேண்டும்.

அரசுசாரா அமைப்புகளின் உதவியோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, நீர்வளத்துறைக்கு சொந்தமான, மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளை புனரமைத்து ஏரிகளின் தரத்தை உயர்த்திட வேண்டும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ராஜா பேசினார்.

### முதுநிலை 'நீட்' தேர்வு திடீரென தள்ளி வைப்பு!

# ஒன்றிய அரசின் மெத்தனத்தால் மாணவர்கள் அலைக்கழிப்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்!

**சென்னை, ஜூன் 24 -**

**"முதுநிலை 'நீட்' தேர்வு திடீரென தள்ளிவைப்பினால் மாணவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர்" என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.**

**இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "நீட் விலக்கே நம் இலக்கு" நீட் தேர்வு தொடர்ந்தால் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள ஏழை எளிய மாணவர்களின் மருத்துவ படிப்பு எட்டா கணியாக மாறி விடும் என்று தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் நீட் தேர்வில் பல்வேறு குளறுபடிகள் குழப்பங்கள் அரங்கேறி வருகிறது.

மக்களவைத் தேர்தல் முடிவுக்கு நாடே காத்திருந்த ஜூன் 4 2024 அன்று நீட் தேர்வு முடிவுகளும் வெளிவந்தன. இத்தேர்வில் பல முறைகேடுகள் நடந்ததாக கண்டுபிடிக்கப்பட்டு முதல் குரல் கொடுத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவரை தொடர்ந்து கல்வியாளர்களும், மாணவர்களும் போராட்டங்களில் ஈடுபட்டனர். நீட் தேர்வு மோசடியான தேர்வு என ஆரம்பத்திலிருந்து சொல்லிக் கொண்டிருந்ததை இன்று வடமாநிலத்தவரும் உணர ஆரம்பித்துள்ளனர்.

2017 ஆம் தொடங்கி இந்தியாவில் நீட் தேர்வு முறை இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2016ஆம் ஆண்டு இறுதியிலேயே நீட் தேர்விற்கு எதிரான கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வந்தார். 2017ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆட்சிக்காலத்தில் இத்தேர்வு முறை நடைமுறைக்கு வந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் இருந்தவரை, ஏன் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்காலத்திலும் கூட நீட் தேர்வு நடைமுறைக்கு வரவில்லை.

ஆனால் 2017க்குப் பிறகு நீட் தேர்வு முறை நடைமுறைக்கு வந்தது. நீட் தேர்வு முறை நடைமுறைக்கு வந்ததில் இருந்து நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் கோரிக்கைகள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல் நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கு நீதி அரசர் ஏ.கே.இராஜன் தலைமையிலான குழு அமைத்து அக்குழுவின் பரிந்துரைகளை சட்ட மசோதாவாக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் அவர்கள் மூலம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேதகு குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்துறை அமைச்சகமும் தமிழ்நாட்டில் இருக்கின்ற உயர்கல்வித்துறை, மருத்துவக்கல்வித்துறை, ஆயுஷ் போன்ற பல்வேறு நிர்வாகங்களுக்கு சிறிய அளவிலான கேள்விகளை கேட்டு அனுப்பி இருந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு பதில்கள் தொடந்து அனுப்பப்பட்டு வருகிறது. இந்தநிலையில் நீட் தேர்வில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களும், குளறுபடிகளும் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டு நீட் தேர்வில் 720 க்கு 720 மதிப்பெண் பெற்றவர்கள் 2 பேர், 2022 ஆம் ஆண்டு யாருமே முழுமையான மதிப்பெண் பெறவில்லை. 2023 ஆம் ஆண்டு 2 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு 2024ல் 67 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர். இதில் குழப்பத்திற்கான முக்கிய காரணம், 720க்கு 720 முழு மதிப்பெண்ணாக 67 பேர் பெற்றதும், அதன் தொடர்ச்சியாக 719, 718 போன்ற மதிப்பெண்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மொத்தம் 180 கேள்விகள் ஒவ்வொரு கேள்விக்கு நான்கு மதிப்பெண்கள் வழங்கப்படும். இவற்றுள் மாணவர் ஒரு கேள்வி விட்டு விட்டால் அவருக்கு 716 மதிப்பெண்கள் கிடைக்கும், அதுவே அனைத்து கேள்விகளுக்கு பதிலளித்து அதில் ஒன்று தவறாக பதில் அளிக்கப்பட்டால் அந்த மாணவருக்கு 715 மதிப்பெண்கள் தான் கிடைக்கும், காரணம் ஒரு கேள்வி தவறானதாக பதில் அளித்தற்கு அபராதமாக 4 மதிப்பெண் மற்றும் கூடுதலாக அபராதமாக 1 மதிப்பெண் குறைக்கப்பட்டு, 715 மதிப்பெண்கள் தான் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய வரைமுறையில் உள்ள இந்த தேர்வில் இந்த ஆண்டு மாணவர்கள் 719, 718 போன்ற மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இதற்கு தேசிய தேர்வு முகமை கருணை மதிப்பெண் வழங்கியதாக குழப்பியது. 23 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் எழுதிய இந்த தேர்வில் குறிப்பிட்ட 1563 மாணவர்களுக்கு மட்டும் கருணை மதிப்பெண் கொடுத்தது ஏன்? இந்த கருணை மதிப்பெண் யார் யாருக்கு எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது? எந்தெந்த தேர்வு மையங்களில் காலதாமதம் ஏற்பட்டது? ஏன் மற்ற மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கவில்லை? போன்ற கேள்விகளுக்கு தேசிய தேர்வு முகமையிடம் பதில் இல்லை.

மருத்துவக் கல்வி நுழைவுத் தேர்வான நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேடு நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் குற்றச்சாட்டுகளை ஒன்றிய அரசு மறுத்தது. தற்போது தேர்வில் முறைகேடு நடைபெற்றுள்ளதை ஒன்றிய அரசு கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில் தேசிய தேர்வு முகமை தலைவராக உள்ள சுபோத் குமாரை நேற்று திடீரென்று ஒன்றிய அரசு நீக்கி நீட் தேர்வு குழப்பங்களையும், குளறுபடிகளையும் மெய்ப்பித்துள்ளது. ஒன்றிய அரசின் குழப்பங்களின் தொடர்ச்சியாக நேற்று காலை 9 மணிக்கு நடைபெற இருந்த முதுநிலை நீட் தேர்வை நேற்று இரவு 9 மணிக்கு தள்ளி வைத்துள்ளது.

நாட்டில் 297 நகரங்களில் நடைபெற இருந்த தேர்வில் 2,28,757 மாணவர்கள் கலந்து கொள்ள இருந்த நிலையில் சரியான திட்டமிடல் இல்லாமல் மாணவர்களை அலைக்கழிக்கும் நிலையில் ஒன்றிய அரசின் போக்கு உள்ளது. இதனால் மாணவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி பல்வேறு உயிரிழப்புகள் தொடர்ச்சியாக ஏற்படுகிறது என்று நாம் தொடர்ந்து அறிவுறுத்தி வரும் நிலையில், கண்டு கொள்ளாத ஒன்றிய அரசின் மெத்தனப் போக்கால் இன்னும் எத்தனை குழப்பங்களும், குளறுபடிகளும் நடைபெறும் என்று கணிக்க முடியாத சூழலில் உள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி தலைமையில்

# அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் - செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரிப்பு!

## விக்கிரவாண்டியில் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்தனர்!

**விக்கிரவாண்டி, ஜூன் 24**

விக்கிரவாண்டி ம